செ.வெ.எண்:58 நாள்:22.07.2019

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

தொழிற் நிறுவனங்கள் மற்றும் தொழிற் கல்வி பயிற்சியாளர்களின் தொழிற்பணி தொடர்பான தேவையினை பூர்த்தி செய்திடவும், பயிற்சியாளர்களின் தொழிற்நுட்ப திறனினை வளர்த்து கொள்ளவும், அதிநவீனத் தொழிற்நுட்பத்தில் பயிற்சி பெற்றிடும் நோக்கத்தில் Apprenticeship Act 1961 என்ற சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து Apprentices(Amendment) Act 2014, Apprenticeship Rules 1992 மற்றும் NAPS[ National Apprenticeship Promotion Scheme] மூலம் நெகிழ்வான சட்டத் திருத்தத்துடன் இத்திட்டம் செவ்வனே செயல்பட்டு வரப்படுகிறது.

இச்சட்டத்தின் திருத்தப்பட்ட விதிகளின்படி 40(நாற்பது) பணியாளர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் கொண்டு செயல்பட்டு வரும் தொழிற்கூடத்தின் நிறுவனர்/ உரிமையாளர் அந்நிறுவனத்தினை தொழிற்பழகுநர்(Apprenticeship) திட்டத்தின் கீழ் www.Apprenticeship.gov.in என்ற இணைய தளத்தின் மூலம் பதிய வேண்டியது அந்நிறுவனத்தார்களின் கடமையாக்கப்பட்டுள்ளது.

நாற்பது பணியாளர்களுக்கு குறைவாக உள்ள தொழிற்கூடங்கள் அவர்களின் விருப்பத்தின் பெயரில் தொழிற்பழகுநர் திட்டத்தில் மேற்குறித்த இணையதளத்தின் மூலம் இணையலாம் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தொழிற்நிறுவனங்களில் கருத்தியல் பயிற்சி அளித்திட போதுமான உள்கட்டமைப்பு இருக்கும் சூழலில் தொழிற்பழகுநர்(Apprenticeship) திட்டத்தின் கீழ் BTP [Basic Training Provider] ஆக இணையதளத்தில் பதிவு செய்திடலாம் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆகையால் தகுதியுடைய நிறுவனங்கள் உடன் உரிய விவரங்களை குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் பதிவுகள் செய்தபின், தேர்ச்சி பெற்ற தகுதியுள்ள தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களை தொழிற்பழகுநர்(Apprentice) ஆக பயன்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பான மேலும் விபரங்கள் பெற்றிட பின்வரும் முகவரியிலுள்ள உதவி இயக்குநரை நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

Apprentice Act 1961 செயல் நடைமுறையினை கருத்தில்கொண்டு விருப்பமுள்ள தேர்ச்சி பெற்ற தகுதியுடைய தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் அவர்களின் தேர்ச்சி பெற்ற கல்வி ஆவணங்களின் நகல்களுடன் கீழ்கண்ட முகவரிக்கு நேரில் வந்து பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம்,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் 2ம் தளம்,
நாமக்கல் - 637 001.
E-Mail :- dadnamakkal@gmail.com
Phone No: 04286-222235

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.